
மியாவ்... மியாவ்... மரணம்!
லயன் காமிக்ஸ்
ரூ. 5/-
டிடெக்டிவ் சார்லஸ் சாகஸம்!

# வாசகர் கடிதம்



**ஆர். கே. அருண்** — **அமரபூண்டி**

'திகில் நகரம் டோக்கியோ' Super action and Super story ! 'நரகத்தைப் பார்த்தேன்' முதல் தொடரே என் மனதை புண்ணாக்கி விட்டது.

**ஜி. முத்துகிருஷ்ணன்** — **சென்னை - 14**

'திகில் நகரம் டோக்கியோ'' கதை, சித்திரம், அனைத்தும் அருமை! மாடஸ்டி & கார்வினிடம் பயிற்சி பெற்றால் புரூஸ்லீயைக் கூட தோற்கடித்து விடலாமே? சார், அட்டையில் கார்வினுக்கும் ஓர் வாய்ப்பு தரலாமே!

**M. ராஜவேல்** — **அருப்புக்கோட்டை**

'திகில் நகரம் டோக்கியோ' மாடஸ்டி & கார்வின் சாகஸத்திற்கு ஒரு மைல் கல்! வாசகர் ஹாட் லைனில் கார்த்திகேயனுக்குப் பதிலளித்த விதம் திருப்திகரமாக இருந்தது.

**M. இரவீந்திரகுமார்** — **திருப்பூர் - 4**

'திகில் நகரம் டோக்கியோ' கதை மிக மிக அருமை. படங்களும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் வண்ணம் அமைந்தன. அட்டைப் படமும் தான்!

**K. கருப்பண்ணன்** — **ஆளங்கூர்**

லயன் காமிக்ஸ் அட்டைப் படத்தில் மிக மிக மிக மோசமான அட்டைப் படம் இதுதான். 'நரகத்தைப் பார்த்தேன்' அருமையான தொடக்கம்.

**S. முஹம்மது ஷரீப்** — **திருச்சி - 1**

'கதை சொல்லும் படங்கள்' கட்டுரைத் தொடரும், 'மாதம் ஒரு ஹீரோ' பகுதியும் கூட கலக்கிவிட்டன. புதிய கதைத் தொடரில் நிறைய எதிர்பார்க்கிறோம்.

**B. அருண்பிரகாஷ்** — **நல்லூத்துக்குளி**

'திகில் நகரம் டோக்கியோ' அருமையாக இருந்தது. 'நரகத்தைப் பார்த்தேன்' - நான் படித்தேன்.





# ஹாட் - லைன்!

## 1996

வாசக நண்பர்களே,

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புதிதாய் புலர்ந்திருக்கும் இந்த ஆண்டில் - பிசாசாய் நம்மைத் தொடர்ந்து வரும் **"தாமதத்தை"** விரட்டியடிக்க வழி தேடிவருகிறேன்! வேறு சில முயற்சிகள் காரணமாய் அடிக்கடி அயல்நாடு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு வந்ததால், 1995ல் நமது காமிக்ஸ் மீது போதிய கவனம் செலுத்த இயலவில்லை என்பதே நிஜம்! அந்தக் குறைபாடு 1996ல் இராது என்று உறுதியளிக்கிறேன்! தாமதங்களுக்கும் - மற்ற குறைகளுக்கும் - sorry!

**"மியாவ்... மியாவ்...மரணம்"** டிடெக்டிவ் சார்லியின் இரண்டாவது சாகஸம்! இந்தக் கதைக்கு நீங்கள் போடும் மார்க்கை வைத்தே - சார்லியின் எதிர்காலம் (நமது காமிக்ஸைப் பொறுத்தவரை) தீர்மானிக்கப்படும் என்பதால் நிச்சயம் உங்கள் கருத்துக்களை எதிர்பார்ப்பேன்! அதே போல **"வாசகர் ஸ்பாட் - லைட்"** பகுதியில் இம்முறை ஒரு 16 பக்க லக்கி லூக் கதை வாசகர் சதீஷின் கைவண்ணத்தில் தயாராகியுள்ளது! அதைப் பற்றியும் அபிப்ராயம் எழுதலாம்!

**"நரகத்தைப் பார்த்தேன்"** சித்திரத்தொடர் அதீதமான Interest உருவாக்கியுள்ளது தெரிகிறது! இது தொடர்பான முழு நீளச் சித்திரக்கதையினை வெளியிட ஏற்பாடுகள் செய்து வருகிறேன்! விபரங்கள் விரைவில்!

சென்ற மாத இதழான **"வெறி நாய் வேட்டை"** க்கு நல்ல வரவேற்பு! அட்டைப்படத்துக்கு Special பாராட்டுக்கள்! ஒரு சில வாசகர்கள் கதை ரொம்ப voilent ஆக உள்ளது என்று எழுதியிருந்தனர்!

அடுத்த மாதம் நமது சாகஸ ஜோடியான மாடஸ்டி & கார்வின் தோன்றும் **"ஆவியின் பாதை"** எனும் அதிரடி ஆக்ஷன் த்ரில்லர் வருகிறது!

மார்ச் மாதம் ரிப் கிர்பியின் **"கம்ப்யூட்டர் கொலைகள்"** வருகிறது! நூதனமான; துப்பறியும் கதை இது!

ஏப்ரல் மாதம் நமது சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லரின் **"மரண முள்"** எனும் முழுநீள **"ஆக்ஷன் - ஸ்பெஷல்"** வருகிறது! இந்தக் கதைக்கான வேலைகள் இப்போதே மும்முரமாக நடைபெற்று வருகின்றன! So - கட்டாயம் இந்த **"ஸ்பெஷல்"** உரிய தேதிக்கு வந்து விடும்!

மே - மாதம் லக்கி லூக் **"மேடையில் ஒரு மன்மதனாக"** உலா வரப் போகிறார்! முழு நீள - முழு வண்ணக் காமெடி!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை - happy reading!

அன்புடன்,



எஸ். விஜயன்


ஏப்ரல் வெளியீடு!
லயன் காமிக்ஸ்
மரண முள்!
சூப்பர் கௌபாய் டெக்ஸ் வில்லர் ஆக்ஷன் ஸ்பெஷல்!
ரூ. 20/-

# ... ... மியாவ்... மியாவ்... மரணம்!



திகிலூட்டும் நமது கதை இப்படித்தான் ஆரம்பமாகிறது...
கிட்டி, கிட்டி வா இங்கே - கமான்!
சமர்த்துப் புள்ளையாம்! மிச்சம் வைக்காம சாப்பிட்டு விடுமாம்!
மியாவ்.
நன்றாக சாப்பிட்டு ஜோராக வளர்ந்து பலமாக இருக்கணும்!
அதற்குள் காலி செய்து விட்டாயா? குட்! குட்!
மியாவ்!
கொஞ்சநேரம் டி.வி. பார்த்துவிட்டு - பிறகு உன்னை படுக்க வைக்கிறேன்!
வெளியே போகணுமா! ஓ.கே. ஆனால் நேற்று மாதிரி காட்டுக் கூச்சல் போட்டு அழக்கூடாது, பார்த்துக்கோ!


பூனை வெளியே போய்விட்டதா?
...
யெஸ். டி.வி.யில் சவுண்டைக் கூட்டுங்கள்!
ஜில் - ஜில் ஜிஞ்சர் பீர் சாப்பிடுங்கள்!
புரோக்ராம் எல்லாமே சுத்த போர்! நான் தூங்கப் போறேன்!
பூனையை வீட்டினுள் வரவழைத்துவிட்டு நானும் வருகிறேன்!
கிட்டி, கிட்டி, இங்கே வா!


கிட்டி...?
கிட்டி? இது நீ... தானா?
கிட்... ஓ.மை காட்!
ஐயோ! ஆ ஆ ஆ ஆ...
மார்த்தா, என்ன ஆச்சு?
எங்கே இருக்கிறாய்? என்ன சப்தம்?
மார்த்தா, என்னால் பார்க்க முடியவில்லையே... ஓ.மை காட்!


மார்த்தா...
ஆண்டவனே...
யார்... யார் இப்படிச்
செய்திருப்பார்கள்...?
ஓ. காட்! நோ! நோ! என்னை
விட்டுப் போய் விடு!
என்னை விட்டு விடு!
என்னை விட்டுப் போய் விடு!
ஐயோ! ஆஆஆ...
ஆஆஆ...


பிறிதொரு இடத்தில்...
...அறுபத்திரெண்டு அறுபத்திமூன்று, அறுபத்து நான்கு...
...அறுபத்தைந்து, அப்பாடி அறுபத்தாறு! எவ்வளவு கஷ்டப்பட்டு ஏறிவரவேண்டியுள்ளது!
ஓ.. இதுவும் நல்லதற்குத்தான்! இப்படி ஏறி இறங்கினால் எந்தப் பெண்ணும் குண்டாகவே முடியாது!
ஹேய் சார்லி! என்ன இது...?
...மூட்டை முடிச்சையெல்லாம் கட்டிக் கொண்டு...?


சார்லி - என்னதான் செய்து கொண்டிருக்கிறீர்கள்?
பார்த்தால் உனக்கு எப்படித் தெரிகிறது? இடத்தைக் காலி செய்து கொண்டிருக்கிறேன்!
அது தெரிகிறது தலைவரே.. என்ன திடீரென்று...?
நீஜமாவே தெரியாதா உனக்கு? எலிகள் ஓடித்திரியும் 66 படிகள் வழியாக மூக்கைத் துளைக்கும் சிறுநீர் நாற்றத்தை சகித்துக் கொண்டு குப்பைத் தொட்டி போன்ற இந்த ஆபீஸிற்கு வந்திருக்கிறாய்! அப்புறமும் காரணம் தெரியாது என்றால் எப்படி?
ஆபீஸ் இடம் மாறுகிறது.... அப்படித்தானே? சூப்பர்! நமது புதிய ஜாகை எங்கே? பார்க் வெஸ்ட் பகுதியா? 56 வது தெருவிலா?
கிழிஞ்சதுபோ! புதிய ஜாகை எதுவும் கிடையாது! நான் இந்தத் துப்பறியும் வேலையை தலைமுழுகப் போகிறேன்!
ஹா! ஹா! வேலையையே தலைமுழுகப் போகிறேன் என்று நீங்கள் சொன்னது மாதிரி என் காதில் விழுந்தது! ஹா! ஹா!
ரொம்ப வருஷத்திற்கு முன்பே செய்திருக்க வேண்டியதை இப்போது தான் செய்யப் போகிறேன்! குட்பை டிடெக்டிவ் தொழிலே!



சார்லஸ் இந்த ஜன்னல் 6 வது மாடியில் இருக்கிறது என்பதை மறந்து விட்டீர்களா?
ரேமாண்ட் சாண்ட்லர்! துப்பறியும் நாவல் எழுதுவதில் பெரிய பிஸ்தா! நானும் இந்த தொழிலுக்கு வந்து 15 வருஷம் ஓடி விட்டது... இன்னைக்கு வரைக்கும் இந்த ஆசாமியின் கதைகளில் வருவது போல அழகான யுவதி எவளுமே என்னைத்தேடி வந்ததில்லை! சே!
இதனை கடுமையாக நான் ஆட்சேபிக்கிறேன்!
விர்ர்ர்!
டிடெக்டிவ் தொழில்னா... ஒரே சாகஸமயமான வாழ்க்கை... அழகான பெண்களின் காதல்... அது - இது வென்று ஆளாளுக்கு சரடு விடுகிறான்கள்! இங்கே வந்து பார்த்தால் தானே தெரியும். மனுஷன் படுகிறபாடு! மாதா மாதம் வாடகை கட்டுவதற்குள் நாக்குத் தள்ளிவிடுகிறது!
சார்லி இவையெல்லாம் கிடைத்தற்கரிய புத்தகங்கள்!
பொத்!
எப்படியும் தாக்குப் பிடித்து விடலாமென்ற வைராக்கியத்துடன் பல்லை இறுகக் கடித்துக் கொண்டு நாட்களை கடத்தும் போது தான் ஒரு உண்மை 'சுரீரென்று' உறைக்க ஆரம்பிக்கின்றது! அதாவது - இந்த ஆபீஸில் போன் அடித்தே பல மாதமாகிவிட்டது என்று! அப்போது தான் புரியும் - ஐயா ஒரு வேலையில்லாத வெட்டிப்பயல் என்று!


பொத்!
பட்!
பட்!
தொம்!
கிறங்கிப் போய் சேரில் உட்கார்ந்து போனையே வெறித்துப் பார்க்கும் போது தான் இனி இந்த சைத்தான் என்றைக்குமே ஒலிக்கப்போவதில்லை என்பது மரமண்டையில் ஏறுகிறது! இத்தனை நாள் மடையன் மாதிரி வாழ்க்கையை இந்த நாலு சுவற்றுக்குள் சின்னாபின்னமாக்கிய அவலம் புரிகிறது! கதைகளில் தான் டிடெக்டிவ்கள் வெற்றிபெறுவதுண்டு - நிஜவாழ்க்கையில் 'லொட்டா' அடிப்பது தான் தலையெழுத்து...!
... இந்த கருப்பு நிற சைத்தானை வெறித்து வெறித்துப் பார்க்கும் போதெல்லாம் ஒரு கையாலாகாத்தனமே மேலோங்கும்...! ஊமைக் கோட்டான்!
டிரிங்!


ஹலோ, டிடெக்டிவ் சார்லியின் ஆபீஸ் இது. நான் அவரது உதவியாள். அலெக்ஸா பேசுகிறேன். மே ஐ ஹெல்ப் யூ?
ம்ம்ம்ம்...! யெஸ்! ஆல் ரைட்! ஓ.கே! தேங்க் யூ!
யாரது?
வ..வந்து பணம் கட்டாததால் உங்களுடைய போன் டிஸ்கனெக்ட் செய்யப் போகிறார்களாம்!
பேசாமல் ஜன்னல் வழியாக வெளியே குதித்துவிடலாமான்னு இருக்கு!
சார்லஸ் இப்படி நினைப்பதை விட்டொழியுங்கள்! இதுவரை நாம் நிறைய கேஸ்களை துப்புத் துலக்கியிருப்பதை மறந்து விடாதீர்கள்! என்ன -இப்போதைக்கு வேலை கொஞ்சம் 'டல்லாக இருக்கலாம்!
கொஞ்சம் டல்லா? அலெக்ஸா, கடைசியாக உனக்கு சம்பளம் கொடுத்து எவ்வளவு காலமாச்சுன்னு ஞாபகமிருக்கா?
நான் உங்களிடம் கேட்டேனா? நிச்சயம் நமக்கு ஒரு 'பிரேக்' கிடைக்கும்! அந்த 'விபரீத விதை' வழக்கு ஞாபகமிருக்கல்லவா?


யா! எட்டு மாதத்தில் ஒரே ஒரு கேஸ்! அலெக்ஸா, எனக்கு சாண்ட் விச்சும் - காப்பியுமாகச் சாப்பிட்டு நாக்கு மரத்துப் போச்சு! நான் எதிர்பார்த்து வந்தது இதையல்ல! சாண்ட்லரின் நாவல்களில் வரும் 'த்ரில்' எனக்கு வேண்டும்... ஆக்ஷன் வேணும்... அழகான பெண்மணிகள் என்னை நாடி வரணும்!
டிடெக்டிவ் சார்லி...?
ஆனால் கடந்த இருபது ஆண்டுகளில் இந்த மலைச் சிங்கங்களை யாருமே பார்த்ததில்லை? போலீசாரும் இந்த வழக்கை மூட்டைகட்டிப் போட்டு விட்டனர்! ஆனால் என் மனதிற்கு இந்த விவகாரத்தில் ஏதோ சூது இருப்பதாகவே படுகிறது! பத்திரிக்கையில் உங்களுடைய விளம்பரத்தைக் கண்டேன்... உடனே நான் என்ன நினைத்தேன் என்றால்...
...என்னுடைய மாமாவும் அத்தையும் பாலைவனத்தை யொட்டிய பகுதியில் ஒரு பண்ணையில் அமைதியாக வாழ்ந்து வந்தனர்! திடீரென்று அவர்களை சில மலைச் சிங்கங்கள் குதறிப் போட்டு விட்டன! கோரமாய் மாண்டு போனார்கள் இருவரும்!
ஹி...ஹி...ஹி! அந்த விளம்பரத்தை இன்னுமா போடுகிறார்கள்? முன்பு வெளியிட்டதற்கான பணத்தையே நான் இன்றும் கொடுக்க வில்லையே...
...கொஞ்சம் பேசாமல் இருங்கள்!


வெளிப்படையாய் சொல்கிறேன் மிஸ் சேப்மேன்! இந்த வழக்கில் விசாரிக்க எதுவுமே இருப்பதாகப் படவில்லை! சிங்கம் கடித்துக் குதறிவிட்டது என்றால் - யாரிடம் போய் விசாரிப்பது? ''சூது'' இருப்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது! இது பற்றிப் பேசுவது சுத்த வேஸ்ட்!
மிஸ்டர் சார்லி - என்னைப் பொறுத்த வரை பணம் ஒரு பிரச்சனையே இல்லை! நடந்தது என்ன வென்று நீங்கள் துப்பறிந்தால்... மகிழ்ச்சியுடன் நிறையப் பணம் தரத் தயாராக இருக்கிறேன்...!
உங்களுடைய சந்தேகத்தைப் போக்க நாங்கள் இதில் தலையிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம் மிஸ். சேப்மேன்! அட்வான்சாக 100 டாலர் கேட்கிறேன்! ஓ.கே தானே? இந்த வழக்கில் சார்லி அடிமட்டம் வரைத் தோண்டிக் கண்டுபிடித்து விடுவார்! கவலை வேண்டாம்!
ரொம்ப நன்றி மிஸ். அலெக்ஸா!
உனக்கென்ன மறை கழன்று விட்டதா? ஒருவாரத்திற்கு முன்பு தான் அந்த சம்பவம் பற்றிப் பேப்பரில் படித்தேன். மலை சிங்கங்கள் தான் இதற்குக் காரணம்! இதில் எந்த ஒரு புதிருமில்லை!
எப்படியோ போனை மீண்டும் ஒலிக்கும்படிச் செய்து விட்டேனல்லவா?
அங்கே பார். நான் ஏழையாக இருக்கலாம் - ஆனால் நேர்மையற்றவன் அல்ல!
முட்டாள் தனமாகப் பேசாதீர்கள்! அவளுக்கு இந்த 100 டாலர் வெறும் தூசு! இந்த வழக்கை ஆராயாத நிலையில் 'இதில் ஒன்றுமில்லை' என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்த வழக்கில் நாம் தலையிடப் போவதாக அவளிடம் உறுதி கூறியுள்ளேன்... எனவே நாம் விசாரணையைத் துவக்குவோம்!


பின்னர்.....
இது தானா?
நடுக்காட்டில் உள்ளதே!
போலீசார் சீல் வைத்துள்ளார்களே...!
நாம் உடைத்துப் பார்த்துவிட வேண்டியது தான்!
இந்த இடத்தைப் பற்றி உனக்கு ஏதாவது உள்ளுணர்வு தோன்றுகிறதா அலெக்ஸா?
யா! இந்த இடத்தில் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக உணர்கிறேன்...
உன்னைப் போய் கேட்டேன் பாரு...!
வீட்டின் பின்பகுதி! இந்த இடத்தில் தானே அவர்கள் கொலை செய்யப்பட்டனர்?
யா! அந்தப் பாட்டி புல்வெளியில் செத்துக் கிடந்தாள். தாத்தா இந்த படியில் கிடந்தார்!
ஒரு தடயத்தையும் காணோம்!
ஓ. சார்லி அங்கே பாருங்கள்! ஒரு பூனை! இதை போலீசார் கவனிக்காமல் விட்டுவிட்டனர் போலும்! இங்கே வா பூஸ்!
பாவம் இந்த பூனை! ரொம்பபசிக்கிறது போலும்! சார்லி - இதை நம்முடன் வீட்டுக்குக் கொண்டு செல்வோமா?
ஓ... தாராளமாய்...! நாம் சாப்பிடும் அரைகுறை உணவில் மீதமிருப்பதைச் சாப்பிடட்டும்!


மறுநாள்_ நகரின் மையப் பகுதியில்_
POLICE


வெல், வெல் யாரது - டிடெக்டிவ் சார்லி சாரா?
நீங்கள் எப்போதுமே வேடிக்கையான ஆசாமிதான்! மெக்! இங்கு என்ன நடந்தது?


சமீப த்தில் பாலைவனப் பகுதியில் நடந்த கொடூரமான மிருகத்தாக்குதல் போல் இங்கும் நடந்துள்ளது! பார்கணுமா சார்!
ஓ. யெஸ் மெக்!
இந்தத் தடவை நீ தலையை நுழைப்பதற்கு வாய்ப்பில்லை! ஏற்கனவே ஒரு நபரை சந்தேகத்தின் பேரில் விசாரித்து வருகிறேன்!
அப்படியா? யார் அந்த ஆசாமி?


பக்கத்து ரூமில்...
போய் ஓட்டுக்கேளு! வேறு யாருமில்லை. அந்த அழகியின் சித்திதான்!
...இது பீட்டரின் வேலையாகத் தான் நிச்சயம் இருக்கும்! அவனுடைய வளர்ப்பு சைத்தான்களும் வீட்டின் பின் பகுதியில் உள்ளன. அவனை ஷெரோன் வெறுத்து ஒதுக்கியதிலிருந்து கடுப்பாக இருந்தான்! ஆபீசர், நீங்கள் அங்கு போய்ப் பாருங்கள் - நிச்சயம் கொலையாளி கிடைப்பான்!
இந்த வழக்கில் குழப்பம் ஒன்றுமில்லை! அப்படித்தானே?
உன் ஜோலியைப் பார்த்துக் கொண்டு போ, சார்லி!
இந்த பீட்டர் அப்படி விஷேசமாய் என்னதான் வளர்க்கிறானாம்?
சிங்கங்கள்! இரண்டு ஆப்ரிக்க சிங்கங்கள்!
போலீசார் அவன் மீது ஏற்கனவே வழக்குப் பதிவு செய்திருப்பார்கள் என நினைத்தேன்!
யாரோ அவனை ஜாமீனில் வெளியே கொண்டு வந்து விட்டார்கள்! அதோ இருக்கிறது அவனது வீடு!
நீங்கள் தான் மிஸ்டர் பீட்டர் என நினைக்கிறேன்!
பத்திரிகை நிருபர்களிடம் நான் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் ஏற்கனவே சொல்லி விட்டேன்! நீங்களாக இங்கிருந்து போகாவிட்டால் கூண்டைத்திறந்து விட்டு விடுவேன்!



அதாவது அந்த அப்பாவிப் பெண்ணை கடித்துக் குதறியது போல எங்களையும் தீர்த்துக் கட்டப் போகிறாயாக்கும்?
ஆத்திரப்படாதே பீட்டர். நாங்கள் பத்திரிகை நிருபர்கள் அல்ல! அது சரி - இந்தச் சிங்கங்களை வளர்க்க நிறைய செலவாகுமே?
உங்களிடம் நான் சொல்ல எதுவுமில்லை?
ஆமாம். போலீசாரிடம் தான் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லி விட்டீர்களே! ஷெரோன் உங்களை வெட்டி விட்ட பின்பு அவளது உயிருக்கு உலை வைக்க போவதாக மிரட்டியதைப் பற்றியும் சொல்லியுள்ளீர்கள்!
நான் யாரையும் மிரட்டவில்லை! எல்லாமே அவளுடைய சித்தி அவிழ்த்து விட்ட கட்டுக் கதை!
உங்களுடைய சிங்கம் ஒன்றின் நகத்தில் இரத்தக் கறை காய்ந்து இருந்ததை போலீசார் கண்டு பிடித்துள்ளனரே - அதுவும் ஷெரோனின் ' பி நெகடிவ்' ரக ரத்தம்! இது பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?
அவள் போனமாதம் இங்கு வந்திருந்தபோது, ரோவர் விளையாட்டாய் அவளைப் பரண்டி வைத்தது! அதற்கு இப்போது என்னவாம்?
''விளையாட்டாக''! சரிதான்!
இங்கிருந்து வெளியே போங்கள்! இல்லையேல் நான் நிச்சயமாக கூண்டைத் திறந்து விட்டுவிடுவேன்!


ரொம்ப நாசுக்காக விசாரணை நடத்தினீர்கள். மேடம்!
சார்லி -இந்த விவகாரத்தில் நாம் ரொம்பத் தாமதமாக தலையிட்டுள்ளோம்! எல்லாத் தடயங்களும் பளிச்சென்று உள்ளன! நிச்சயம் இவன் தான் கொலையாளி! போலீஸ் ஆய்வுக் கூட சோதனையின் முடிவு உறுதி செய்யப்பட்டவுடன் இவனுக்கு மாமியார் வீடுதான்!
பாலைவனப் பகுதியில் கொடூரமாகச் செத்த தம்பதிகளையும் இவன் தான் கொன்றிருப்பான் என்கிறாயா? அவர்களைப் பற்றி இவன் கேள்விப்பட்டது கூடயில்லை! சிங்கங்களை எப்படி ஏவியிருப்பான்?
அதை அவன் செய்யவில்லை! அந்தத் தம்பதிகளை காட்டு மிருகங்கள் - மலைச்சிங்கங்களோ அல்லது வேறு எதுவோ தாக்கியிருக்கலாம்! விடையறிய முடியாத அந்தக் கொலையை முன்னோடியாகக் கொண்டு இப்போது ஷெரோனைக் கொன்றிருப்பான்!
இதற்கு வேறு என்ன விளக்கம் சொல்ல முடியும்? ஷெரேன் அவளுடைய வீட்டிலேயே கொல்லப்பட்டுள்ளாள்! சிங்கங்கள் தானாகவே வீட்டினுள் நுழைய வழியில்லை!
ஓ.கே! நாம் போய் மிஸ்டர் டைடனைச் சந்திப்போம்!
யாரது?
பீட்டரை ஜாமீனில் வெளியே கொண்டுவந்த நபர் அவர்தான்!
டைடன் ஆய்வுக்கூடம்
TITAN LABORATORIES


நல்ல பையனாக இங்கேயே இருடா, கண்ணா!
பீட்டர் நிரபராதி என்று நினைக் ரீர்களா, மிஸ்டர் டைடன்?
ஷெரோன் ஒருமாதிரியான பெண்! அவளது காதலர்களுள் எவனோ ஒருவன் அவளை க்ளோஸ் பண்ணி விட்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை! ஆனால் பீட்டர் அப்படியில்லை - அவனுடைய தந்தையை கொரியாவில் இருந்த போதே எனக்குத் தெரியும். இந்தத் தொழிலை நாங்கள் இருவரும் சேர்ந்து தான் ஆரம்பித்தோம்! நல்ல குணமுடைய மனிதர் அவர்! அவரது பிள்ளை கொலைகாரனாக இருக்க முடியாது!
மிஸ்டர் சார்லி -செத்துப்போன பெண்ணின் பைத்தியக்காரச் சித்தி உளறுவதை நம்பாதீர்கள்! பீட்டர் நிரபராதி தான்!
ஷெரோன் குடும்பத்தினர் மீது உங்களுக்கு நல்லவிதமான அபிப்ராயம் கிடையாது! அப்படித்தானே?
யெஸ்! ஏகப்பட்ட சொத்து உள்ள போதிலும் - அவர்களது நடவடிக்கைகள் சரி கிடையாது!
உங்கள் பாக்டரி அருமையாக உள்ளது? அது சரி - ஏதோ வாசம் அடிக்கிறதே?



ஓ. அதுவா? எங்களுடைய உணவுத் தயாரிப்பு ஆய்வகத்திலிருந்து வரும் ரசாயனப் பொருட்களின் வாசனை தான் மிஸ்டர் சார்லி! அமெரிக்காவின் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்று! நாய்களுக்கான பிஸ்கெட் முதல் செயற்கை இனிப்பு வகைகள் வரை எல்லாமே இங்கு தயார் செய்கிறோம்!
சாப்பாட்டு வேளையாகி விட்டது. எங்களுக்காக நேரம் ஒதுக்கியதற்கு நன்றி மிஸ்டர் டைடன்!
இப்போ எங்கே போவது?
நம்மை வேலைக்கு அமர்த்திய மிஸ் சூசன் சேப்மேனிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்! கமான்
கிரீச்!
அந்த அழகியிடம் என்ன கேட்கப் போகிறீர்கள்?
ஹேய்! இந்தப் பறவைக்கு என்ன வந்தது?
ஈஈஈஈஈஈஈ? சார்லி!
கிரீச்! கிரீச்!!
என்ன இது...?
சார்லி, என்னைத் தாக்குகிறது!
கிரீச்!
சாட்டன் உனக்கு என்னாச்சு?


சார்லி வண்டியைப் பார்த்து ஓட்டுங்கள்!
கிறீச் கிறீச்!!
இப்போது என் மீது பாய்கிறது! என்ன இழவோடா சாமி?
விர்ர்...கிர்ர்...!
ஓ சார்லி! இதற்கு கிறுக்குப் பிடித்து விட்டது!
க்றீறீச்ச்...றீச்...
என்னால் பார்க்க முடியவில்லை! என்னைக் குருடாக்கி விட்டது!


க்ராஷ்!
டட்..டம்!
டமால்!!
தும்-தும்!!


என்னுடைய காரின் விலை என்னவென்று தெரியுமா என்று அந்தப் பைத்தியக்காரப் பறவையிடம் கேட்கணும்!
சார்லி! இங்கே பாருங்கள்! பயல் சாதுவாகி விட்டான்!
ரொம்ப சந்தோஷம்!
சாப்பிட்டது ஏதாவது ஒத்துக்கொள்ளாமல் போயிருக்கும்!
எனக்கு வரும் ஆத்திரத்தில் இன்றைய இரவு 'காக்கா ரோஸ்ட்' போடலாமா என்றிருக்கு!
சாரி மிஸ்டர் சார்லி! கடந்த முறை நீங்கள் காரை வாடகைக்கு எடுத்த போதே 100 டாலர் பாக்கியுள்ளது!
இந்த வழக்கில் நான் வெற்றி கண்ட உடன், எல்லாவற்றையும் செட்டில் பண்ணி விடுகிறேன்!
முதலில் பழைய பாக்கி 100 டாலரைக் கொடுங்கள் மிஸ்டர் சார்லி!
கார் இல்லாவிட்டால் வழக்கை முடிக்க முடியாது! வழக்கை முடிக்காவிட்டால் -பைசா கிடையாது!
இந்தா வாங்கிக்கோ! ஜல்தியாக ஒரு காரைக் கொடு!


அந்தப் பணத்தைக் கொண்டு டெலிபோன் பில் கட்டிவிடலாம் என்றல்லவா நினைத்தேன்!
முதலில் இதுதான் முக்கியம்! எங்கே போவது? சூசனின் வீட்டிற்கா?
முயற்சியா?
நோ! அதற்கு முன் இன்னொரு வேலையுள்ளது! முதலில் அதை முயற்சி செய்து பார்ப்போம்!
சார்லி! இது பைத்தியக்காரத்தனம்! செத்துப்போக ஆசையா?
அட - கொஞ்ச நேரம் பேசாமல் வாம்மா?
கிளிக்!
அடச்சே!
ஸ் ஸ்! ஜாக்கிரதை!
சார்லி!
சாரி!
க்ராஷ்!


ஹலோ பசங்களா! நான் உங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டேனோ?
நீங்கள் போட்ட சப்தத்தில் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களில் பாதிப்பேர் எழுந்திருப்பார்கள்!
அடடா - அழையா விருந்தாளிகள்!
அடச்சே! நீங்கள் போட்ட சப்தம் அவனை எழுப்பிவிட்டது!
குட் ஈவ்னிங் மிஸ்டர் பீட்டர்! முயல் வேட்டைக்கு இது ஸன் அல்லவே? துப்பாக்கியோடு எங்கே கிளம்பி விட்டீர்கள்?
இந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்காதீர்கள் என்று சொன்னது மண்டையில் ஏறலையா?
பீட்டர், இந்த வழியாகப் போக வேண்டியிருந்தது! உன்னுடைய வளர்ப்பு மிருகங்களைத் திரும்பவும் ஒரு தடவை பார்த்து விட்டுப் போகலாம் என்று நினைத்தேன்... கூண்டை நீ பூட்டிக்கூட வைப்பதில்லையோ?
நீ ரொம்ப தைரியசாலி தான் மிஸ்டர்! கூண்டுக் கதவுகளை மூடிவிடு!
ஓ.கே. பீட்டர்!
...அதாவது உன்னுடைய நண்பர்களைப் பார்த்து நான் 'ஹலோ' சொன்ன உடன்!
முட்டாள் தனமாக செயல்படாதே சார்லி!
ஆண்டவனே!
அமைதியாக இருங்கள் பசங்களா...! உணர்ச்சி வசப்பட வேண்டாம்...


கர்ர்!
சார்லி!
சார்லி வெளியே வந்து தொலையுங்கள்!
அமைதியாக இரு பயலே... அமைதி...
வெல்... நாங்கள் அதற்குள் ரொம்ப தோஸ்தாகி விட்டோம் பார்த்தாயா?
இங்கே பாருங்கள் - இந்த விளையாட்டை எதற்காக ஆடினீர்கள் என்பது எனக்குத் தெரியாது - ஆனால் அடுத்த தடவை என்னை எச்சரிக்கை செய்து விடுங்கள்! எனக்கு இருப்பதோ ஒரே உயர், பயத்தில் 'பட்'டென்று போய்விடக்கூடும்!
கொலை வெறி பிடித்த விலங்குகள் இவையல்ல என்பது புரிகிறதல்லவா?
அவனுடைய உத்தரவின் பேரில் அவைகள் தாக்கக்கூடும் என்பது உங்களுக்கு உறைக்கவில்லையா?
சர்க்கஸில் உள்ளதைப் போல பழக்கப்பட்ட சாது -வான சிங்கங்கள் இவை! அந்தச் சிங்கங்கள் யாரையும் கொல்லவில்லை அலெக்ஸா! சிங்கங்களின் நகங்கள் மிகப் பெரிதாக உள்ளன! கொலை செய்யப் பட்டவர்களின உடலில் கீறல்கள இத்தனை பெரிதல்ல!


காரணமில்லாமல் கொலை செய்வது யார்தான் என்று நினைக்கிறீர்கள்?
''காரணமில்லாமல் கொலை''... இது தான் நம்முடைய விசாரணைக்கே ஒரு துப்பு போல் உள்ளது...
டைடன் ஆய்வுக்கூடமா? அங்கு என்ன வேலை?
கொலையாளியைத் தேடித்தான் அங்கே போகிறோம்!
நீ ஆபீஸுக்குப் போய் போன் பக்கத்தில் காத்திரு. போலீஸ் ஆய்வுக்கூடத்திலிருந்து என் தோஸ்த் ஒருவன் போன் செய்வான் கொலை செய்யப்பட்டவர்களின் மீது இருந்த கீறல்கள் பற்றி ஒரு தகவல் கூறுவார். இன்னும் ஒரு மணி நேரத்தில் இங்கிருந்து போன் பண்ணி அந்த விஷயத்தைக் கேட்டுக் கொள்கிறேன்!


ஜெ.டைடன் சேர்மன்
விண்ணப்ப பாரம்
பெயர் : பீட்டர்
இவ்வளவு போதும் மிஸ்டர் சார்லி.....


பீட்டர்?
பின்னே - மிஸ்டர் டைடன் மீது சந்தேகப்பட்டாயா?
நோ - முதலாளி மீது ஏதோ மனத்தாங்கல் கொண்டதொரு தொழிலாளியைத் தான் சந்தேகப்பட்டு வந்தேன். ஆனால் நீயும் இங்கு தான் வேலை செய்கிறாய் என்பது எனக்குத் தெரியாது! இப்போது சொல் - இந்த பார்முலாவை எப்படித் தயாரித்தாய்?
விடாமுயற்சி தான் மிஸ்டர் சார்லி! காலேஜில் பயோ கெமிஸ்டரி முடித்தவன் நான்! உணவுப் பொருட்கள் தயாரிப்பு எனக்குப் புதிதல்ல!
இரசாயன சோதனையில் நீ கில்லாடியாகயிருக்கலாம்! ஆனால் - கொலை செய்யும் வழிமுறைகள் துளியும் தெரியாதவன் நீ! காதலித்தவளைப் பழிவாங்க இப்படியா காட்டுமிராண்டித் தனமாக செயல்படுவது?
ஹா, ஹா, ஹா, ஹா, ஹா
உனக்கும் கூட விஷயம் இன்னும் முழுசாய் புரியவில்லையா மிஸ்டர் சார்லி? இங்குள்ள போலீசாரை விட நீ கெட்டிக் காரனாக இருப்பாய் என்றல்லவா நினைத்தேன்! ஷெரோனுடன் நான் சுற்றியது வாஸ்தவம் தான்! அவளிடம் ஏராளமான காசு இருந்தது! ஆனால், அவள் என்னைக் கழற்றி விட்டபோது நான் கவலைப்படவில்லை! உலகத்தில் 'பசையுள்ள' பெண்களுக்குப் பஞ்சமே கிடையாது!


அப்படியானால் அவளை ஏன் கொலை செய்தாய்?
விதியின் விளையாட்டு மிஸ்டர் சார்லி! இன்னும் சொல்லப் போனால் ஷெரோனும் அவளது தோழியும் தங்களைத் தாங்களே கொலை செய்து கொண்டனர் என்று கூட சொல்லலாம்! இந்தப் பக்கமாக நடந்து வருகிறாயா, ப்ளீஸ்?
அப்படியானால் சிங்கங்கள் கடித்துக் குதறவில்லையா?
சிங்கங்களைத் தான் முதலில் பயன்படுத்துவதாக இருந்தேன். உணவுக் கலப்பட ரசாயனம் பற்றிய எனது சோதனைகளுக்கு அவைகளை பயன்படுத்தினேன்! இங்கிருந்துதான் வளர்ப்புப் பிராணிகள் மற்றும் நாட்டிலுள்ள பெரிய பெரிய மிருகக் காட்சி சாலைகளுக்கு உணவுப் பொருட்கள் சப்ளை செய்யப்படுகின்றன. கொஞ்சம் கற்பனை செய்து பார்! கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை சாப்பிடும் மிருகங்கள் - வெறிபிடித்து ஆக்ரோஷமானால் விளைவு எப்படியிருக்கும்?
டைட்டான் தொழிற்சாலை பொருளாதார ரீதியில் அழிவை சந்திக்கும்!
தற்செயலாக ஒரு நாள் சாதாரணப் பூனை, சிங்கங்கள் உள்ள கூண்டுக்குள் போய் அவை சாப்பிடும் உணவை சாப்பிட நேர்ந்தது! விளைவைப் பார்க்கணுமே! புலி போல் மாறிவிட்டது! அன்றுதான் எனது ஆராய்ச்சி முழு வெற்றி பெற்று விட்டது என்பதை உணர்ந்தேன்!
ஓஹோ...! மிருகக் காட்சி சாலைகளுக்கு அனுப்பப்படும் உணவைக் கலப்படம் செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் - வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவுத் தயாரிப்பிலும் உன் 'மருந்தை' சேர்க்கத் தொடங்கி விட்டாயாக்கும்?
ஒரு அசுர தொழிற்சாலையை மண்ணைக் கவ்வ வைக்க இதை விட சுலபமாய் வேறு வழி உண்டா - என்ன? வளர்ப்புப் பிராணிகள் எல்லாம் வெறியாட்டம் போடத் தொடங்கினால் -டைடன் ஆட்டம் க்ளோஸ்!


உனக்கு இவ்வளவு தெரிந்தது போதும்! அப்படியே திரும்பு!
ஏன் இந்த அளவுக்கு டைடனை வெறுக்கிறாய்? உன்னை ஜாமீனில் கொண்டுவர ஏற்பாடு செய்தவர் அவர் தானே!
செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடும் முயற்சி அது! என்னுடைய தந்தையிடம் ரொம்ப 'நட்புடன்' இருந்ததாக கூறியிருப்பாரே? எனது தந்தையுடன் அவர் வைத்திருந்த வியாபாரக் கூட்டு பற்றி கூறினாரா? என் தந்தைக்கு மாரடைப்பு எப்படி வந்தது என்று கூறினாரா? நோ - அவர் சொல்லியிருக்க மாட்டார்! மோசடிக்காரன் - நம்பியவரைக் கழுத்தறுத்த மோசக்காரன்!
என்னுடைய விஷேச பார்முலா எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கிறாயா?... இதோ பூனைகளுக்கான உணவுச் சோதனை!
டைடன் தொழிற்சாலையை அழிக்கப் போகும் பார்முலா இதுதான்!
நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட வீடுகளில் பூனைகள் உண்டு!


ஷெரோன் புதுசாக ஒரு பூனைய வளர்க்கத் தொடங்கியது எனக்குத் தெரியாது! பாவம்! எங்களது உணவைச் சாப்பிட்ட பூனை வெறிபிடித்து அவளைத் தீர்த்துக் கட்டி விட்டது! பாலைவனத்தில் செத்துப் போன கிழடுகள் கூட இப்படித்தான்!
அந்தப் பக்கமாக கீழே இறங்கு!
எனது உதவியாளர் மிஸ்.ஸ்மித் இங்கு நிச்சயம் வருவாள்!
அவள் உன்னைவிட திறமைசாலியா? பார்க்கலாம்!
ஆ!
பட்!
டமாா்!



ஐயோ!
சார்லி! என்னைக் காப்பாற்று!
ஐயோ!
பொத்
மேலே உள்ள பட்டனை அழுத்து! பெரிய கதவைத்திறந்து விடு! நான் வெளியேற வழிசெய்!


எந்த பட்டனை அழுத்த?
இரண்டாவது பட்டன்... ஐயோ! ஆ ஆ ஆ.....!
அம்மா! என் கண் போச்சே!
எந்த பட்டன்? ஆண்டவனே - எந்த பட்டனை அழுத்துவது?
பீட்டர்! பீட்டர்!!


சார்லி ஆபீஸில்-
பயலே இதோ அருமையான உணவு!
அதைச் சாப்பிடு!
டிரிங்!
சார்லி! போலீஸ் ஆய்வுக் கூடத்திலிருந்து போன் செய்தார்! நீங்கள் நினைத்தது சரியாகிவிட்டது! ஷெரோன் உடலில் இருந்த காயங்களுக்கும் பீட்டருடைய சிங்கங்களுக்கும் தொடர்பே இல்லை.
அலெக்ஸா -
அது பற்றிக் கவலைப்படாதே! நான் கொலையாளியைப் பிடித்து விட்டேன். அவன்...
ஓ மை காட்!
ஐயோ!
அலெக்ஸா? என்னது? ஏன் கூச்சல் போடுகிறாய்?
ஐயோ!


பீட்டர் சன்? நான் தான் சார்லி! சீக்கிரம் என் ஆபீஸுக்குப் போ! அலெக்ஸாவை யாரோ தாக்குகிறார்கள்! யெஸ்! சீக்கிரம் போ!
TITAN
கிழிஞ்சது போ! கார் இல்லாமல் எப்படித்தான் போவதோ?
க்ரீச்
உய்...உய்...உய்!
ஐயோ!...அம்மா!


AX Co.
..கர்..ர்.மிய்ய்..யாவ்..!
க்ராஷ்! க்ராஷ்
அட ஆண்டவனே...!
அலெக்ஸா! உனக்கு ஒன்றுமில்லையே!
பைன்...பைன்... லேசாக நகக் கீறல்கள் தான்!
பூனை? அந்தப் பூனை என்னானது?
அதோ உட்கார்ந்திருக்கும் அந்த சாரிடம் கேட்பதுதான் நல்லது!
(முற்றும்)

# மாதம் ஒரு ஹீரோ!

காமிக்ஸ் உலகின் Top ஹீரோயின்



| | | |
|---|---|---|
| பெயர் | : | மாடஸ்டி பிளைஸி |
| வயது | : | ஹீரோயின்களிடம் வயதெல்லாம் கேட்கக் கூடாது! |
| கல்வித் தகுதி | : | உலகமெனும் பள்ளிக்கூடத்தில் டாக்டரேட்! |
| தொழில் | : | அன்று - குற்றத் தலைவி!<br>இன்று - குற்றத்தின் எதிரி! |
| பொழுது போக்குகள் | : | மீன் பிடிப்பது; சந்தடியற்ற இடங்களை ஆராய்வது! |
| விரும்புவது | : | அமைதியான வாழ்க்கையை; வில்லி கார்வினின் நட்பை! |
| விரும்பாதது | : | உளவுத்துறை தலைவரின் நச்சரிப்புகள் |
| நம்புவது | : | தனது ஆயுதமான காங்கோ & வில்லி கார்வின். |
| நம்பாதது | : | அதிகார வர்க்கத்தின் செயல்திறனை! |
| மற்ற பெயர்(கள்) | : | பெண் புலி; லேடி ஜேம்ஸ்-பாண்ட் |
| சாதனை | : | 32 ஆண்டுகளாய் உலகமெல்லாம் சாகஸம் செய்து வருவது! |
| நீண்ட கால சாதனை | : | ஆண் ஆதிக்கம் இருந்து வரும் காமிக்ஸ் உலகில் - தனக்கென சர்வதேச அளவில் புகழ் தேடிக்கொண்ட ஒரே பெண் கதாபாத்திரம் என்ற பெருமை. சாகஸம் செய்திட ஆண் - பெண் என்ற வேறுபாடு அவசியமில்லை என்று நிரூபித்தது! |

## நமது காமிக்ஸ்களில் மாடஸ்டி பிளைஸி

1) கத்தி முனையில் மாடஸ்டி
2) மாடஸ்டி In இஸ்தான் புல்
3) மரணக் கோட்டை
4) மர்ம எதிரி
5) தீபாவளி மலர் '86
6) லயன் சூப்பர் ஸ்பெஷல் (சிறுகதை)
7) கானகத்தில் கண்ணாமூச்சி
8) கற்கால வேட்டை
9) நடுக்கடலில் அடிமைகள்
10) லயன் சென்சுவரி ஸ்பெஷல்
11) மந்திர மண்ணில் மாடஸ்டி
12) பச்சை வனப் பாவை
13) லயன் TOP 10 ஸ்பெஷல்
14) திகில் நகரம் டோக்யோ

# க்ரைம் க்விஸ் - 25 விடை

**'திகில் நகரம் டோக்யோ'** இதழில் வெளியான க்ரைம் - க்விஸ் 25க்கு ஏராளமானவர்கள் சரியான விடையை எழுதியிருந்தனர். குலுக்கல் மூலம் பரிசுபெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

**1. S. Naveen,**
S/o. T. Shanmugaraju,
9-A, Observatory St.,
K. P. Road,
Nagercoil - 629 001.



**2. S. ராஜா,**
14, பட்டரைகாரத் தெரு,
கோரிப்பாளையம்,
மதுரை - 2.



**3. R. பிரபு,,**
S/o. C. ராதாகிருஷ்ணன்,
பொள்ளாச்சி ரோடு,
மீனாட்சிபுரம்,
திவான்சா புதூர் (P.O.)
பொள்ளாச்சி - (T.K.)



## விடை

ப்ராங்க் தான் குற்றவாளி. ப்ராங்க் புதன்கிழமை மதிய வேளையில் வீட்டை விட்டு சென்றதாகச் சொன்னான், ஆனால் புதன்கிழமை காலை பேப்பர் வெளியே கிடந்தது. இன்ஸ்பெக்டரின் விசாரனைக்கு முன்னரே தான் திருடவில்லை என்றும் ப்ராங்க் கூறியது தான்!

அதிர்ஷ்டசாலிகளான வாசகர் மூவருக்கும் எமது வாழ்த்துக்களுடன் லயன் டி சர்ட்டும், கீ செயினும் அனுப்பப்படும்!

இம்மாத க்ரைம் க்விஸ் (26) க்கு விடையனுப்பும் போது மறவாமல் இந்தக் கூப்பனை இணைத்திட வேண்டும்!

**க்ரைம் க்விஸ் - 26**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த.பெ. எண் : 374
சிவகாசி - 626 123


ஒரு கண்ணீர் தொடர்கதை!
நரகத்தைப் பார்த்தேன்!
பாகம்-3
எப்ப உனக்கு குழந்தை பிறக்கும் மம்மி?
ரொம்ப சீக்கிரத்தில்!
அது ஆண் குழந்தை யாக இருந்தால் ஆச்சரியப் படுவேன்!
?
இந்த நிலைமையில் நான் ஓடி ஒளிந்தால் வயிற்றில் இருக்கும் குழந்தை பாதிக்கப்படுமே?
ஹேய்! சுசுமு! உனக்கு ஒரு குட்டித் தம்பி வரப்போறான்! அதன் பிறகு உன்னுடைய வேலைகளை அவன் மீது சுமத்தி விடலாம்!
யா! அவனுக்கு நான் அண்ணன் ஆகிவிடுவேன்! என்ன செய்யணும் என்று அவனுக்குச் சொல்லிக் கொடுப்பேன்!
ஸ்கூலுக்குப் போக நேரமாச்சு கெய்ஜி! இப்ப நீ புறப்படுவது தான் நல்லது!
உப்ஸ்! இப்பவே லேட்டாகி விட்டது!
இப்ப நல்ல பையன்!
பை டாடி! பை மம்மி! தங்கச்சி கமான், நீயும் என்னுடன் வருவது நல்லது!
அது தான் நான் கடைசியாக எனது தந்தை, சகோதரி மற்றும் தம்பியை பார்த்தது.
அன்றைய தினம் வானம் மேக மூட்டம் எதுவுமின்றி ஊதா நிறத்தில் தெளிவாக இருந்தது.



தோளோடு தோள் இணைந்து பள்ளிக்குப் போவோம்! எங்கள் நாட்டிற்காகப் போராடும் ராணுவ வீரர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
எக்ஸ்கியூஸ் மி...
யெஸ்.. மேடம்?
ஹ்ம்ம்ம்... எனக்குத் தெரியலையே!
முதல் வகுப்பு பிள்ளைகளுக்கு இன்று பாடம் நடப்பது கோவிலிலா அல்லது பள்ளிக் கூடத்திலா?
ஓ.டியர்... எங்கு போய் நான் கண்டு பிடிப்பது...
ஹேய்! இது ஒரு பி - 29 ரக விமானம் தான்!
ஏன் இது மீண்டும் வருகிறது?!
இந்த விமானம் தான் எங்கள் மீது அணுகுண்டு போடப் போகிறது என நான் கனவு காண முடியுமா?
வாழ்வா அல்லது சாவா என்பதை முடிவுசெய்ய பள்ளிச் சுவர் எனக்கு அருகிலேயே இருந்தது.



காலை 8.15
பளீர்
உஷ்ஷ்...
ஆ...?
ஊ ஊ ஊஷ்...
பல லட்சக்கணக்கான பிளாஷ் லைட் பல்புகள் ஒரே நேரத்தில் வெடித்தது போல் இருந்தது. ஒரு பயங்கரமான மஞ்சள் - மற்றும் ஆரஞ்சு நிறத்தில் வெளிச்சம் ஏற்பட்டது.
நடுவில் வெள்ளை நிறத்தில் வெப்ப மண்டலம் காணப்பட்டது. அது என்னை நோக்கி வந்தது நான் மயங்கிவிட்டேன்... எவ்வளவு நேரம் நான் அப்படியே கிடந்தேன், என்பது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.
ஆங்
இவ்வளவு பெரிய அதிர்ச்சியில் நான் இருந்தேன்! என்னுடைய கன்னத்தில் ஒரு ஆணி குத்தியிருப்பதோ அதிலிருந்து ரத்தம் கொட்டுவதையோ நான் கவனிக்க கூட இல்லை.
எ...என்ன நடந்தது? எங்கும் கருகிப் போய் இருளாக இருந்தது!
(விக்கல்..)


இது ஒரு பெண்தான்... அவளுடைய உடலில் இருக்கும் தோல் எல்லாமே கருகிப்போய், உடலில் இருந்து கழன்று கீழே விழுந்து கொண்டிருந்தது!
குண்டு வெடித்தபோது ஏற்பட்ட வெப்ப கதிர்களைப் பள்ளிக்கூடச் சுவர் தடுத்துவிட்டது.
எனவே என்னுடைய தலையிலும் கழுத்திலும் லேசான தீக்காயங்களே ஏற்பட்டது.
ஐயோ! அம்மா!
என்... என்ன நடந்தது? எல்லா வீடுகளுமே தரைமட்டமாகிக் கிடக்குதே..!
தொடரும்





# வாசகர் ஹாட் - லைன்!

● **R. T. முருகன், மடிப்பாக்கம், சென்னை.**

லயன் ஆசிரியரே,

**"டேஞ்சர் டயபாலிக்கின்"** இரண்டாவது கதை எப்போது வெளிவரும்? ஸ்பைடரின் **குற்ற - பூதம்** மாடஸ்டியின் **"நிலா மனிதன்"**, **"விசித்திர நால்வர்"** ஆகிய புத்தகங்கள் வெளிவருமா - வராதா? (இந்தக் கதைகளின் விளம்பரங்கள் **"மனித - எரிமலை"**யில் வந்திருந்தன)

**ஆசிரியர் பதில் :**

1986ல் வெளிவந்த விளம்பரங்களை இன்னும் ஞாபகத்தில் **வைத்துக்** கொண்டு - விடாப்பிடியாகக் **கேள்வி** கேட்கும் நண்பர் முருகனுக்கு பதில்கள் :

**1) டேஞ்சர் டயபாலிக் பற்றி :**

"டேஞ்சர் டயபாலிக்" கதைகள் - டி.வி. சீரியலாக**வும், திரைப்**படமாகவும் அயல்நாட்டில் வந்து வெற்றியடைந்தவை! இவற்றின் காமிக்ஸ் வடிவில் **ஒரு சிக்கல்** உள்ளது. அதாவது - இதுவரை கிட்டத்தட்ட 200 காமிக்ஸ் கதைகள் (டயபாலிக்) வந்துள்ளன. அவையனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட, பெரியதொரு **கதைச் சங்கிலி** என்று **சொல்லலாம்! So** - கதை நம்பர் 1 முதல் **ஆரம்பித்தாலொழிய** கதைகள் புரிவது **சிரமம்! ஆனால் டயபாலிக்** கதைத் தொடர்களில் அனைத்துமே நமக்கு ஏற்ற விதத்தில் **இருப்பதில்லை! ஒரு** சில - நிறைய வசனங்களுடன்- 'வளவள'வென்று உள்ளன! ஒரு சிலவோ - **கொஞ்சம் Sexy ஆக** உள்ளன! ஆகையால் நமக்கு ஏற்ற கதைகளை மட்டும் செலக்ட் பண்ணிப் **போடும் போது** முன் கதை தொடர்ச்சி காரணமாய் **சிக்கல்** வருகிறது! **So** - டயபாலிக் எனது மேஜையில் உறங்கிக் கொண்டிருக்கிறார்!

**2) ஸ்பைடரின் "குற்ற - பூதம்"?**

**"பாட்டில் பூதம்"** என்ற பெயரில் 1991 **லயன் ஹாலி-டே** ஸ்பெஷலில் வெளி வந்த கதை இதுதான்!

**3) மாடஸ்டியின் "நிலா - மனிதன்"?**

பம்பாயிலிருந்து "டைம்ஸ் ஆப் இந்தியா" நிறுவனத்தினர் சில காலம் முன்பு வெளியிட்ட காமிக்ஸில் இந்தக் கதையை பிரசுரித்து விட்டார்கள்! **So** - அதை repeat பண்ண விரும்பவில்லை.

**4) விசித்திர நால்வர்?**

**இந்தக் கதைகளை** அயல் நாட்டில் வெளியிட்டு வந்த நிறுவனம் பல வருடங்களுக்கு முன்னரே மூடப்பட்டு விட்டது! **So** - கதைகள் வாங்கிட இயலவில்லை!

பொதுவாகவே - விளம்பரப் படுத்தப்படும் கதைகள் வர தாமதமாகிறதே என்று பலரும் எழுதுவதுண்டு! சமீபத்தில் **"இரத்தமும் - யுத்தமும்"** என்ற தலைப்பில் யுகோஸ்லாவிய **உள்நாட்டுப்** போர் பற்றிய சித்திரத் தொடர் **Schedule** படி வரவில்லையே என்று பலரும் கேட்டுள்ளனர்! **இந்தக்** கதையை உருவாக்கும் **ஓவியர் போரில் சிக்கி** - வீடு; வாசல் இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்! சமீபத்தில்தான் ஐ. நா. அமைதிப்படையின் உதவியுடன் தப்பி வெளியே வந்துள்ளார்! விரைவில் அவரது கதைத் தொடர் தொடங்கும்!

# மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | **தி. சு. முருகேஷ்** |
| முகவரி | : | **31, செக்காண்கன்னி ரோடு, காந்திநகர், கும்பகோணம் - 612 001.** |
| கல்வித்தகுதி | : | + 2 எழுதியுள்ளேன் |
| பொழுதுபோக்குகள் | : | (பாட்டு கேட்டல்) மிகவும் அதிகமாக லயன் காமிக்ஸ் படித்தல் மட்டுமே. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | 6'ம் வகுப்பு முதல் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | | முன்பு ஓசி வாங்கி நாமம் போட்டேன். ஆனால் இன்று தினம் 10 ரூபாய் போட்டு நிறைய பணம் சேர்த்து வைத்துள்ளேன். |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் | : | முத்து காமிக்ஸ், லயன், மினிலயன், திகில், LION COMICS DIGEST (ENGLISH) மட்டுமே. |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | : | எல்லாமே உயிர் போன்றது. except மாடஸ்தி in இஸ்தான்புல். மிகவும் பிடித்தது. திக்கு தெரியாத தீவில் and பாட்டில் பூதம் |
| உங்களைத் தவிர வீட்டில் வேறு யாரும் படிக்கிறார்களா? | : | இல்லை |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | டிராயரில் வைத்து இறுகப் பூட்டி சாவியை எப்போதும் நானே வைத்துக் கொள்வேன். |
| குறை | : | **மிகப் பெரிய குறை ஜனவரி இதழ் இப்பொழுது வரை கிடைக்கவில்லை.** |

# லயன் ஸ்பாட் - லைட்!



வாசக ஜூனியர்
தே. சதீஷ்
கோவை-641041.

காமெடி தௌபாய்

லக்கிலூக் தோன்றும்

# ஒரு குதிரையின் கதை!

ஓல்டு ஆர்லியன்ஸ் நகரத்தில் தான் நம் கதை துவக்கம் பெறுகிறது. அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் குதிரை ஏலம் தான் இனிமேல் நடக்கவிருக்கும் சம்பவங்களுக்கு முன்னோடியாகும்.




இதோ வருகிறது முதல் குதிரை. இதன் பெயர் செஸ்ட்னட். இதை நாங்கள் 1000 டாலர்களில் ஆரம்பிக்கிறோம்
1001 டாலர்
ஒரு தரம்! இரண்டு தரம்! மூன்று தரம்!
டுமீல்!
எத்தனை டாலர்?
இதே போல பல அருமையான குதிரைகளை அடிமட்ட விலைக்கு வாங்கினான் ஒருவன்
ப்ளாக் ப்யூட்டியை திரு அல்லிஸ்டர் பெறுகிறார்
பீட்டர் பேனை திரு அல்லிஸ்டர் பெறுகிறார்
ஸ்நோ வொயிட்டை திரு அல்லிஸ்டர் வாங்குகிறார்
ஒன்றே ஒன்றைத்தவிர
க்ரேவ்யார்ட்டை யாரும் வாங்கவில்லை ஆகையால் ஊர் வெட்டியான் அதைப் பெறுகிறார்
எல்லா குதிரையையும் ஒரே ஆள் வாங்கறான் ஏதோ தில்லுமுல்லு.
சரியா சொன்னே. அங்கப்பாரு


RESTAURA
ரௌடிப்பசங்க
ஆமாம்! அல்லிஸ்டருக்கு எதிராக விலை பேசறவங்க எல்லோருக்கும் பரலோகம் தான்
அதையடுத்து
இதோ வருகிறது, இந்த ஏலத்தின் மிகச் சிறந்த குதிரை....
ஸ்டாலியன்
யிப்பீயீஈ!
யாரது? போலியன்


பார்க்க அசப்புல ஜாலிமாதிரியே இருக்கே?!
?!
தொடர்ந்து-
ஓகே நீங்க ஏலத்தில் தைரியமாகப் போட்டி போடலாம்
ஆனா அந்த ரவுடிப்பசங்க
அவங்க வேறொரு இடத்தில் பத்திரமா இருக்காங்க


ஏலத்தில் லக்கியின் நண்பருக்கே (வழக்கம் போல) வெற்றி
என் பெயர் ஜோ ஹார்ப்பர், குதிரைவியாபாரி, நியூயார்க்.
நான் லக்கிலூக், இது ஜாலிஜம்பர்
தொழில்: பரதேசி
லூக், உன்னால எனக்கு ஒரு உதவி ஆகனும். அல்லிஸ்டர் எப்படியும் குதிரையை அடைய முனைவான். ஆகையால் நீதான் நியூயார்க் வரை என் கூட வரனும்
போச்சு இதென்ன புதுவம்பு
ஷ்யூர்
அதையடுத்து, அமைதியான ஒரு ரயில் நிலையத்திலிருந்து ஆர்பாட்டமற்றமுறையில் நம் நண்பர்கள் நியூயார்க்கை நோக்கிச் சென்ற ரயில் புறப்பட்டது.
HORSE CARRIAGE
க்கூக்கூ!


இதற்கிடையே
ஷெரீப் வாங்களேன் ரம்மி விளையாட
ஓ இதோ
க்ளிக்!
ஹேய் நாம தப்பிக்க அருமையான யோசனை. அவரேல் ஷெரீப்போட வெளையாடறான் நாம அந்த நேரத்தில சுரங்கம் தோண்டி தப்பிச்சுடலாம்
வெரிகுட்
அதையடுத்து
3 ஏஸ் எனக்கே வெற்றி
மடார்! மட்! டம்!
கமான் அவரேல் சுரங்கம் ரெடி
ஏய் நான் ஜெயிக்கும்போது கூப்பிடாதே
சே இந்த சுரங்கம் வழியா வர்றது கஷ்டமாயிருக்கு பேசாம கதவு வழியா வந்திருக்கலாம்
எப்படி?
இதோ நான் ஷெரீப்பிடம் ரம்மியில் ஜெயித்த சாவிக் கொத்து
ஓங்! கும்! டுமீல்! டம்!
நண்பர்களே நீங்கள் கண்ட காட்சி குற்றத்தின் சரித்திரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. இவர்கள் தோண்டிய சுரங்கத்தின் முன் சமீபத்தில் ஈழத்தமிழர் தோண்டிய சுரங்கம் அற்பமானது



பின்னர் - நம் நண்பர்கள் சென்று கொண்டிருந்த ரயிலில்
ஹே - வண்டியை நிறுத்து
ஸ்க்ரீச்!
ம்ம் சரக்கை எடுங்க
ROAR
ஹேய் என்னாச்சு வண்டி திடீர்னு நின்னுடுச்சே


ஹலோ கௌபாய் எப்படி இருக்கே?
?!
?!
?!
ஹேய் நீங்கதானே டால்டன் சகோதரர்கள். நீங்க இப்படி தறிகெட்டு அலையறதை நெனச்சு உங்க அம்மா எவ்வளோ கஷ்டப்படுவாங்க தெரியுமா?
எனக்கு மம்மியை பாக்கணும்
ஏய் எங்களையா ஏமாத்தப்பாக்கிறே?
அவர்கள் அசந்த அந்த ஒரு நிமிடம் நிழலைவிட வேகமாக சுடும் துப்பாக்கி வீரனுக்குப் போதுமானதாக இருந்தது
டுமீல்!
ஆ! ஆ! ஆ!
மம்மீ!


அடுத்த ஊரில் ரௌடிகள் போலீஸிடம் ஒப்படைக்கப்பட்டன. அதையடுத்து
சே! இப்படியே உள்ள வர்றதும் வெளியே போறதும் இதே வேலையா போச்சு
ஆஹா! அட்டகாசமான ஜெயில் சாப்பாடு
ஹேய் அங்கப்பாரு மிஸ்டர் அல்லிஸ்டர் நம்மை சந்திக்க வர்றாரு
மம்சீக்கிரம் இந்த சுருட்டைப் பத்த வையுங்க
அதையடுத்து
புகைபிடிப்பது தவறுன்னு மம்மி சொல்லியிருக்கு அதனால் அப்டியே சாப்டுவேன்!
அவரேல் மடையா, அது வெடிகுண்டு!
பூம்!
எங்களை மீட்டதற்கு ரொம்ப நன்றி


பின்னர்
அதோ அந்த பாலம் வழியாகதான் ரயில் வரும். அங்க நாம வெடி வைப்போம்


ரோந்து வந்தது நல்லதாப்போச்சு
சரக்!


கிளம்பு ஜாலி நம் மூளைக்கு வேலை வந்திருச்சு
அடபா ரெஸ்ட எடுக்க உடமாட்டாரே
அதையடுத்து ஜாலிக்கு கறுப்பு பெயின்ட அடிக்கப்பட்டது
போச்சு
தூள் இப்ப நீ ஸ்டாலியன் மாரியே இருக்க
அங்கே பாலத்தில்
அங்க பாருங்க லூக் குதிரையில வர்றான்


ஆ அசக்கு ஆ அமுக்கு
ஹே! என்னது பாலம் வெடிக்கல


வாங்க என்னாச்சுன்னு போய் பார்ப்போம்
ம்ம் நான் என்ன நினைக்கிறேன் என்று சொன்னால்
என்ன இது பாம்ஹன் வெடிக்கவே இல்லை?
அதானே எனக்கும் புரியலை
ஹேய் பாம் ஏன் வெடிக்கலேன்னு எனக்குத் தெரியும்
ஏனாம்?
அது பத்து நிமிஷம் கழிச்சு வெடிக்குற டைம்பாம்
வாட்?


பூம்!
நான் அப்பவே சொன்னேன்
பின்னர் ரயில் பத்திரமாக நியூயார்க்கை அடைந்தது
ஐயகோ மோசம்போனேன்


அப்பாடா எல்லா ப்ரச்னையும் முடிந்தது
எல்லாப்ரசனைகளும் இல்லை
ஹேய் இதுரெண்டுலெ எதுஸ்பாலியன்
கவலைப் படாதீங்க சுலுவா கண்டுபிடிச்சுடலாம்
சரக்!
வரச்!
சரக்! வரக்!
க்வீன்
ஸ்பாலியம்
ஆஹா இப்படி குளிச்சு எவ்வளவு நாளாச்சு


நான் ஒரு தன்னந்தனி கௌபாய்
என் குடியிருப்போ வெகுதொலைவு
தனிமையே என வாழ்க்கை
தனிமையே என் துணைவன்
முற்றும்

கதை சொல்லும் படங்கள் தொடர் அடுத்த இதழில் வரும்!

— ஆசிரியர்.

---


**திருச்சி மற்றும் அருகாமையிலுள்ள நகர வாசகர்கள் கவனத்திற்கு :**

# விற்பனைக்கு கைவசம் உள்ளன

## லயன் காமிக்ஸ்

| | |
|---|---|
| லயன் TOP 10 ஸ்பெஷல் | - 25-00 |
| விபரீத விதவை | - 4-50 |
| இரத்தப்படலம் V | - 6-50 |
| எத்தனுக்குத் எத்தன் | - 3-50 |

நமது புதிய காமிக்ஸ் வெளியீடுகள் அனைத்தும் கீழ்கண்ட முகவரியில் மாதந்தோறும் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஸ்ரீ லக்ஷ்மி புத்தக நிலையம்,**
3, நடுகுஜிலி தெரு,
(காமாட்சியம்மன் கோவில் எதிரில்)
பெரிய கம்மாள தெரு, திருச்சி - 8.

# பதில் போடுங்கள் ப்ளீஸ்...!

## 1995 ன்

1. மிக அருமையான கதை : ____________
2. மிக அறுவையான கதை : ____________
3. மிக அழகான அட்டைப்படம் : ____________
4. மிக சொதப்பலான அட்டைப்படம் : ____________

**5. லயனில் பிடித்த பகுதிகள்?** மார்க்

| | | | மார்க் |
|---|---|---|---|
| a) | ஹாட் லைன் | ஆமாம் / இல்லை | ☐ |
| b) | சித்திரத் தொடர்கதை | ஆமாம் / இல்லை | ☐ |
| c) | வாசகர் ஸ்பாட் - லைட் | ஆமாம் / இல்லை | ☐ |
| d) | கதை சொல்லும் படங்கள் | ஆமாம் / இல்லை | ☐ |
| e) | க்ரைம் க்விஸ் போட்டி | ஆமாம் / இல்லை | ☐ |
| f) | வாசகர் ஹாட் லைன் | ஆமாம் / இல்லை | ☐ |

6. தாமதம் தவிர வேறு என்ன குறைகள் லயனில்? : 1) ____________ 2) ____________ 3) ____________

7. புதிதாக என்ன செய்யலாம்? : 1) ____________ 2) ____________ 3) ____________

**வாசகர் பெயர் & முகவரி :** ____________

____________


மியாவ்... மியாவ்... மரணம்!
லயன் காமிக்ஸ்
டிடெக்டிவ் சார்லஸ் சாகஸம்!
ரூ. 5/-